**கொழும்பு மா நகர சபை**
**கொழும்பு மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஜூன் 06 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 செப்தெம்பர் 08 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 திசெம்பர் 30 ஆந் திகதி சபையின் நகர ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கொழும்பு மா நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசுப்பாய்ச்சலும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாநகர சபை ஒன்றிற்கு கிடைக்கக் கூடிய அனைத்துப் பணங்களும் மாநகர சபை நிதியம் என அறிமுகப்படுத்தப்படும் கணக்குகளிற்கு செலவு வைக்கப்பட வேண்டுமெனினும் பல்வேறு நன்கொடையாளர்களிடமிருந்து கிடைத்திருந்த ரூபா 22,616,905 தொகையொன்று கொழும்பு நகர அபிவிருத்தி நிதியக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு நகர அபிவிருத்தி நிதியம் என்ற பேரில் ரூபா 23,552,838 தொகை நிலையான வைப்புக் கணக்கு ஒன்றில் வைப்புச் செய்திருந்ததுடன் அக் கொடுக்கல் வாங்கல்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) நுண்ணுயிர் ஆய்வுகூடம், திண்மக் கழிவுப்பொருள் சேகரிப்பு நிலையம் மற்றும் தீ அணைப்பு சேவை நிலையங்களின் இருப்புக்கள், இறுதி இருப்புக்களுக்கு உட்படுத்தியிருக்கவில்லை.

(இ) நீர் வழங்கள்கள், மல குழாய்கள் அபிவிருத்தி விடயங்களுக்காக மீளாய்வாண்டின் போது வெளி நிறுவனங்களில் இருந்து கிடைத்திருந்த ரூபா 216,828,272 இற்கான நிதியேற்பாடு மற்றும் அந்த செயற்திட்டங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 38,129,424 தொகைக்கான செலவுகளை திருப்பி செலுத்த வேண்டிய வைப்பு கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால் சபையினால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பான செலவுகள் மற்றும் அதனோடு தொடர்புடைய வருமானம் நிதிக்கூற்றுக்களில் சித்தரித்துக் காட்டப்படவில்லை.

(ஈ) சபையின் வங்கிக் கணக்குகள் 03 இன் பிரகாரம் வங்கி இணக்கக் கூற்றுக்களில் 4 வருட காலமாகக் காணப்படும் ரூபா 10,967,601 இற்கான நேரடி வரவு மற்றும் செலவு வைத்தல்களை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) கடந்த ஆண்டுகளின் போது கடன்கொடுத்தோர்கள் என இனங்கண்டு பலவின கடன்கொடுத்தோர் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 1,100,493,421

தொகை மீளாய்வாண்டின் போதும், வெவ்வேறாக இனங்கண்டு பலவினக் கடன்கொடுத்தோர் கணக்கில் இருந்து அகற்றி மிகைகள் மற்றும் பற்றாக்குறைக் கணக்கிற்கு செலவு வைத்திருந்த போதிலும் அப் பெறுமதியுள் காணப்பட்ட நிலையான சொத்துக்கள், கடன்கொடுத்தோர் கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

03 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள பெறுமதி மற்றும் அதனோடு தொடர்புடைய பட்டோலைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 4,807,148 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டதுடன் அவ் வித்தியாசத்திற்கான காரணங்களை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் காணப்படும் 7 கடன்பட்டோர் கணக்குகளில் ரூபா 15,921,302 தொகையான வரவு மீதிகள் மற்றும் ரூபா 2,140,747 இற்கான செலவு மீதியொன்றும் முன்கொண்டுவரப்பட்டு காணப்பட்டதுடன் இதற்காக காலப்பகுப்பாய்வொன்றும் சமர்ப்பித்திருக்கவில்லை.

(ஆ) உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 15,647,557 இற்கான வரித்தொகை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்காமல் செலுத்த வேண்டிய வைப்புக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது

(இ) பல வருட காலம் முதல் தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காணப்படும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கியிருந்த சிறு காசு மற்றும் விஷேட முற்பணக் கணக்குகளில் தீர்க்கப்படாதிருந்த ரூபா 3,858,435 இற்கான வரவு மீதியொன்று காணப்பட்டது.

(ஈ) வயிட் பார்க் காணி விற்பனை தொடர்பாக ஓய்வுபெற்ற 04 உத்தியோகத்தர்களிடம் சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 221,676 தொகை அந்த உத்தியோகத்தர்களின் ஓய்வூதியப் பணிக் கொடையிலிருந்து அறவிடப்பட வேண்டுமெனினும் 2105 திசெம்பர் 31 திகதி வரை அக் கடன் தொகை மற்றும் வட்டியினை அறவீடு செய்திருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

#### (அ) தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமை

(i) கூட்டுத்தொகை ரூபா 10,442,194,520 தொகைக்கான 10 கணக்கு விடயங்கள் தொடர்புடைய நாளது வரை பேணப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் விஷேட தர வியாபாரங்களுக்காக இறுதியாக மேற்கொள்ளப்பட்ட வீதவரி பெறுமதி மதிப்பீடு கணிக்கப்பட்ட முறையினை காட்டும் தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii) நுண்ணுயிர் ஆய்வுகூடத்திற்காக 2011, 2012 மற்றும் 2013 ஆண்டுகளின் போது அதிக விலையுடைய மற்றும் இயலளவினை கொண்ட ரூபா 41.8 மில்லியனிற்கான புதிய இயந்திர உபகரணங்கள் மற்றும் ரூபா 4.4 மில்லியனிற்கான சிறிய கருவிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யும் போது அவற்றின் பொருத்தமான தன்மையை இனங்காண்பதற்கு அரசாங்க பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 2.8.1(ஆ)வின் பிரகாரம்

ஆய்வு கூடத்தின் நுண் உயிரினங்கள் தொடர்பான வைத்திய நிபுணர் ஒருவரின் விதப்புரை பெற்றதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டிற்கான ரூபா 5,167,125 பெறுமதியான 34 கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்**

2014 ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 4,991,542 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான கணக்காய்வு ஐய வினா ஒன்றிற்கு 2016 செப்தெம்பர் 30 திகதி வரையும் பதில் கிடைத்திருக்கவில்லை.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை**

**(அ) மாநகர சபைக் கட்டளைச் சட்டம் (அதிகாரம் 252)**

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 254அ(1) மற்றும் (2) இன் படி சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ஏதேனும் ஒரு வரி, தண்டம், தண்டப்பணம், தண்டனைக்கான கொடுப்பனவு ஒன்று, கட்டணமொன்று அல்லது வேறு கொடுப்பனவு ஒன்று மாநகர சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த சந்தர்ப்பத்தில் அப் பணத்தை அறவீடு செய்து, மாநகர சபை நிதியத்திற்கு செலவு வைப்பதற்கான தேவையான அனைத்துச் செயற்பாடுகளையும் எடுத்தல் நகர ஆணையாளரின் கடமையொன்றாக இருக்க வேண்டும். எனினும் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 3,616,054,624 தொகையான நிலுவை தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை.

**(ஆ) இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணங்கள்**

(i) 371(2)(ஆ) ஏற்பாடுகளின் பிரகாரம் துணைக் கட்டுநிதியொன்று ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா 20,000 இனை மிகைக்கக் கூடாதெனினும் மீளாய்வாண்டின் போது 13 சந்தர்ப்பங்களில் கூட்டுத்தொகை ரூபா 2,601,942 தொகைக்கான ‘‘குறிப்பிட்ட விடயத்திற்கான’’ துணைக் கட்டுநிதி வழங்கியிருந்தது.

(ii) 6 மாதங்களை மிகைத்துள்ள மற்றும் 12 வருடங்களை விட குறைந்த காலம் முதல் வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத கூட்டுப்பெறுமதி ரூபா 19,840,669 இற்கான காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 396(இ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(இ) இலங்கை குடியரசின் தாபனக் கோவை**

(i) தாபனக் கோவையின் 11 ஆம் அத்தியாயம் 13.3 ஆம் பிரிவிற்கு முரணாக 01 வருடம் முதல் 3 வரையான காலத்திற்கான 87 பதவிகளுக்காக தொடர்ச்சியாக பதில் கடமையாற்றும் நியமனங்கள் 87 வழங்கப்பட்டிருந்தது.

(ii) தாபனக் கோவையின் viii ஆம் அத்தியாயம் 3.1 ஆம் பிரிவின் பிரகாரம் குறிப்பிட்ட வேலையை நிறைவேற்றுவதற்காக வேறு ஒரு வழியுமில்லாத அதிவிஷேட சந்தர்ப்பத்திலேயே மேலதிக வேலைக்காக பணம் செலவிடப்பட வேண்டுமெனினும் அதற்கு முரணாக ஒரே விடயத்தை நிறைவேற்றுவதற்காக 2011 ஆண்டு முதல் 2013 பெப்ரவரி வரை ரூபா 2,302,127 இற்கான மேலதிக நேரவேலை மற்றும் விடுமுறை நாட் சம்பளம் மற்றும் ரூபா 13,588,617 இற்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு ஒன்று நுண்ணுயிர் ஆய்வுகூட உத்தியோகத்தர்களுக்கு மற்றும்

ஊழியர்களுக்கு செலுத்தியிருந்ததென தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

**(ஈ) பொது நிருவாகச் சுற்றறிக்கை**

2007 அக்தோபர் 17 ஆந் திகதிய 09/2007 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் 12 மாதங்கள் அல்லது அதற்கு மிகையான காலம் தற்போது மீள் சேவையில் ஈடுபடுத்தியுள்ள உத்தியோகத்தர் ஒருவரை அக் காலப்பகுதிக்காக மாத்திரம் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்த முடியுமெனினும் குறிப்பிட்ட நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் மீது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு, அந்த பதவிக்கான நியமனம் செய்யும்/ அதிகாரம் அளிக்கப்படும்/ நிருவாக அதிகாரியினால் அந்த வெற்றிடத்தை நிரந்தர சேவையில் தகுதியுள்ள உத்தியோகத்தர் ஒருவரை குறிப்பிட்ட தினத்தில் நிரப்ப முடியாதென எழுத்துமூலமாக அறிவித்துள்ள சந்தர்ப்பம் தவிர அந்த உத்தியோகத்தரை திரும்பவும் மீள் பதவியில் நியமித்தல் கூடாது எனினும் அதற்கு முரணாக ஒப்பந்த அடிப்படையில் காணி அலுவலர் பதவிக்காக ஈடுபடுத்தியிருந்த ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவருக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 969,382 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**(உ) நகர அபிவிருத்தி அதிகார சபை சுற்றறிக்கை**

1988 செப்தெம்பர் 20 திகதிய 08 ஆம் இலக்க சுற்றறிக்கை, நகர அபிவிருத்தி அதிகார சபையின் பெயரில் வங்கிக் கணக்கொன்று பேணப்பட வேண்டியதுடன், கணக்கில் போதியளவு தொகையொன்று சேகரமாகியவுடன் உள்ளூராட்சி நிறுவனத்தினால் இனங்காணப்பட்ட செயற்திட்டமொன்றிற்காக சாத்தியக்கூறு அறிக்கை ஒன்றுடன் பணத்தை திரும்பப் பெறுவதற்கான அங்கீகாரத்தையும் பெற்று சபைக்குத் தேவையான செயற்திட்டமொன்றினை செயற்படுத்த முடியும் என குறிப்பிட்டிருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அரச பிரதி செயற்திட்டக் கணக்கில் ரூபா 650,418,149 தொகைக்கான மீதி நீண்ட காலம் முதல் சேகரிக்கப்பட்டு காணப்பட்ட போதிலும் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான சபையின் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவுகள் ரூபா 569,949,762 தொகையாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 67,504,358 தொகையாகும். மீளாய்வாண்டின் போது மூலதனப் பெறுவனவுகள் ரூபா 2,739,745,422 தொகை மற்றும் மூலதனச் செலவுகள் ரூபா 3,273,906,691 தொகையாக காணப்பட்டதுடன் ஒட்டுமொத்த பற்றாக்குறை ரூபா 1,104,111,031 தொகையாகும்.

(ஆ) மீளாய்வாண்டின் போது மீண்டுவரும் வருமானம் முன்னைய ஆண்டை விட ரூபா 278 மில்லியனினால் மற்றும் மூலதனப் பெறுவனவுகள் ரூபா 1,765 மில்லியனால் அதிகரித்து காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் போது சபையின் மொத்த மீண்டுவரும் செலவு ரூபா 915 மில்லியனால் அதிகரித்திருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது ஊழியர் சம்பளம் ரூபா 615 மில்லியனால், நடைமுறை நிதிச் செலவுகள் ரூபா 39 மில்லியனினால், உதவிநிதி மற்றும் பங்களிப்புக்கான

ரூபா 219 மில்லியனினால், தாபன மற்றும் ஏனைய செலவுகள் ரூபா 94 மில்லியனால் மற்றும் மூலதன நிதிக் கட்டணம் ரூபா 17 மில்லியனினால் அதிகரித்தல் செலவுகளின் அதிகரிப்புக்கு முக்கியமாக தாக்கியிருந்தது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது ஒட்டுமொத்த மீண்டுவரும் வருமானம் அதிகரிப்புக்களின் 79 சதவீதம் அரசாங்க உதவிகள், ஏனைய உதவிகள் மற்றும் மீளளிப்புச் செய்தல்களாகும்.

(ஆ) வீதவரி மற்றும் வரி ரூபா 108.6 மில்லியனினால் மற்றும் வாடகை வருமானம் ரூபா 61 மில்லியனினால் முன்னைய ஆண்டை விட அதிகரித்திருந்ததுடன் கட்டணங்கள் மற்றும் தண்டப்பண அறவீடுகள் மற்றும் வட்டி வருமானம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக முறையே ரூபா 93 மில்லியனினால் மற்றும் ரூபா 27 மில்லியனினால் குறைந்திருந்தது.

(இ) மூலதனப் பெறுவனவுகளின் கீழ் ரூபா 2136.7 மில்லியனாகக் காணப்பட்ட முத்திரை வரி வருமானப் பெறுவனவுகள் ரூபா 479 மில்லியனிற்கான உலக வங்கி உதவியின் கீழ் வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணப் பெறுவனவுகள் ரூபா 75 மில்லியன் மற்றும் யப்பான் உதவியின் கீழ் தீ அணைப்பு உபகரணப் பெறுவனவு உட்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது உதவி நிதி மற்றும் பங்களித்தல் தொகை என சுயதொழில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்குவற்காக ரூபா 44 மில்லியன் தொகை மகளிர் விவகாரங்களுக்காக ரூபா 162.2 மில்லியனிற்கான செலவு ஒன்றினை மேற்கொள்ளல் மற்றும் 150 ஆம் ஆண்டு விழாவிற்காக ரூபா 126.9 தொகையான செலவுகள் மேற்கொள்ளல், முன்னைய ஆண்டை விட உதவிநிதிகள் மற்றும் பங்களித்தல் செலவுகள் 47.1 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு பாதித்திருந்தது.

(உ) நிரந்தர வங்கி மேலதிகப் பற்று தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லல் மற்றும் தற்காலிக வங்கி மேலதிகப் பற்று வசதிகள் பெற்றுக் கொள்ளப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் போது வங்கி மேலதிகப் பற்று வட்டி 114 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

(ஊ) ஆசிய அபிவிருத்தி வங்கியில் இருந்து பெற்றிருந்த கடன் தொகைக்காக 2015 ஆம் ஆண்டின் போது கடன் வட்டி செலுத்துதல் ரூபா 17 மில்லியனாகும்.

## 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் ஒட்டுமொத்த நடைமுறை சொத்துக்கள் ரூபா 5,938,460,593 தொகையாகக் காணப்பட்டதுடன் நடைமுறை பொறுப்புக்கள் ரூபா 6,306,588,754 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் ரூபா 368,128,164 இற்கான குறை தொழிற்படு மூலதனமொன்று அவதானிக்கப்பட்டதுடன் சபையின் மொத்த நடைமுறை சொத்துக்களும் தேறிய போதிலும் அப் பணத்தினைக் கொண்டு மொத்த நடைமுறை பொறுப்புக்களை தீர்ப்பதற்கு போதியளவு நிதியமொன்று உருவாகவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2015 திசெம்பர் மாதத்திற்கான வங்கிக் கூற்றுக்களின் பிரகாரம் சபையின் பிரதான கொடுப்பனவுக் கணக்கில் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு வங்கி மீதி ரூபா 1,231,049,775 இற்கான மேலதிகப் பற்றொன்று காணப்பட்டது.

(இ) மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ஆண்டின் போது அறவிடப்படாமை எதிர்வு கூறிய செலவுகள் மிகைத்தல் மற்றும் எதிர்வு கூறாத செலவுகள் நேரிட்டுள்ளமை காரணமாக சபையின் கொடுப்பனவுகளின் எண்ணிக்கை அதிகரித்திருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டு பூராகவும் ஒட்டு மொத்தமாக வங்கி மேலதிகப்பற்று நிலைமையொன்று உருவாகியிருந்தது. 2015 திசெம்பர் 31 திகதி வரை சபைக்குச் சொந்தமான அனைத்து நிலையான வைப்புக்களையும் பிணையாக வைத்து ரூபா 1200 மில்லியன் வரை நிரந்தர வங்கி மேலதிகப் பற்று ஒன்று மற்றும் 02 சந்தர்ப்பங்களின் ரூபா 350 மில்லியன் தற்காலிக மேலதிகப் பற்று எடுத்திருந்தது. ஒட்டுமொத்தமாக சபைக்கு அறவிடப்பட வேண்டிய வருமானத்தை சேகரிப்பதற்காக செயற்திறனுடைய நிகழ்ச்சித் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்துதல் மற்றும் செலவு முகாமைத்துவ சிக்கல்களுடனான நிலைமை காரணமாக 2011 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 742,900,572 தொகைக்கான வங்கி மேலதிகப்பற்று 2015 திசெம்பர் 31 திகதி அளவில் ரூபா 1,231,049,775 தொகை வரை தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லல் காணப்பட்டது.

(ஈ) 2015 ஆண்டிற்கான பாதீட்டின் மூலம் நடைமுறை நிதிக் கட்டணம் என ரூபா 50 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டு ரூபா 70.5 மில்லியன் மேலதிகப்பற்று வட்டி என செலுத்தியிருந்தமையால் ஏற்பாடுகளை மிகைத்த செலவுகள் 41 சதவீதமாகும்.

## 2.4 வருமான நிருவாகம்

### 2.4.1 வருமான மதிப்பீடுகள்

2015 ஆண்டிற்கான மதிப்பீடுகளை உள்ளவாறான வருமானத்துடன் இணக்கம் செய்யும் போது 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு எதுவித வருமானமும் அறவிடப்படாத 05 வருமான விடயங்களுக்காக ரூபா 860.4 மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்திருந்தது. மேலும், 06 வருமான விடயங்களுக்காக ரூபா 1296.7 இற்கான வருமானமொன்று மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றில் ரூபா 57.7 மில்லியன் உள்ளவாறான அறவீடுகள் காணப்பட்ட போதிலும் அறவிடப்பட்டமையால், அறவிடப்படாத சதவீதம் 94.3 முதல் 100 வரையான உயர்ந்த வீச்சினைப் பெற்றிருந்தது. 2015 ஆண்டிற்கான மதிப்பீடுகள் தயாரிக்கும் போது மிகை மதிப்பீடொன்று செய்யப்பட்டிருந்ததுடன் நிதிப் பிரமாணங்கள் 85(1)(இ) இன் பிரகாரம் முடிந்த அளவு தத்துரூபமான மற்றும் பிழையற்ற முறையில் தமது மதிப்பீடுகளை தயாரிப்பதற்காக வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் முயற்சி செய்ய வேண்டுமெனினும் அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

### 2.4.2 வீதவரி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

(அ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை வீதவரித் தொகை ரூபா 2,596,914,615 ஆக இருந்தது. அந்த மொத்த நிலுவை வீதவரி மீதியில் ரூபா ஐந்து இலட்சத்தை மிகைத்த ஆதனங்கள் 647 காணப்பட்டதுடன் அவற்றின் நிலுவை வீதவரி தொகை ரூபா 1,302,259,439 ஆகக் காணப்பட்டது. இவற்றினிடையே நிலுவை வீதவரி ரூபா பத்து இலட்சங்களை மிகைத்துள்ள ஆதனங்களின் எண்ணிக்கை 312 ஆகும். அவற்றின் பெறுமதி ரூபா 1,072,043,576 தொகையாகும். அவை மொத்த நிலுவை வரித் தொகையில் 41 சதவீதமாகும்.

(ஆ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்பட்ட அரசாங்க ஆதனங்களிடையே 188 ஆதனங்களின் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வீதவரி நிலுவை ரூபா 528,420,822 தொகையாகக் காணப்பட்டதுடன் அந்த நிலுவை மொத்த நிலுவையில் 17 சதவீதமாகும்.

(இ) ரூபா 5 இலட்சத்தை விட மிகையான நிலுவை மீதிகள் காணப்படும் ஆதனங்கள் இடையே 2015 ஆண்டின் போது வீத வரி ஏதும் அறவிடப்படாத ஆதனங்கள் 457

அவதானிக்கப்பட்டதுடன் அவற்றின் மொத்த நிலுவைத் தொகை ரூபா 851,473,441 தொகையாகும்.

(ஈ) 2011 ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு அதற்கு ஒப்பாக 04 வருடங்களின் வருமான அதிகரிப்பை கவனத்தில் எடுத்த போது 2012 ஆண்டின் போது வருமானம் 7.46 சதவீதம் மாத்திரம் அதிகரித்திருந்ததுடன் 2015 ஆண்டளவில் அதிகரித்தல் 3.97 சதவீதமாகும். அதனை 2012 ஆண்டிற்கான அதிகரிப்புடன் இணக்கஞ் செய்யும் போது 4 சவீதத் தொகையினால் குறைவடைந்திருந்தது.

(உ) 05 ஆண்டுகளில் நிலுவை வீதவரி அறவீடு சதவீதமாக எடுத்தால் 14.4 சதவீதம் முதல் 29.5 சதவீதம் வரையான வீச்சொன்றில் பரவியிருந்ததுடன் நிலுவை வருமான அறவீடுகள் பலவீன மட்டத்திலேயே காணப்பட்டது. விபரங்கள் கீழே தரப்படுகின்றது.

| ஆண்டு | ஆரம்ப மீதி<br>ரூபா. | நிலுவையில் இருந்து அறவீடு<br>ரூபா. | சதவீதத்தில்<br>% |
|---|---|---|---|
| 2011 | 2,603,060,920 | 424,213,088 | 16.29 |
| 2012 | 2,682,525,723 | 471,064,929 | 17.56 |
| 2013 | 2,758,579,237 | 397,259,160 | 14.40 |
| 2014 | 2,944,276,572 | 88,584,288 | 29.50 |
| 2015 | 2,515,636,643 | 451,710,814 | 17.95 |

(ஊ) மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 230(4) ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளூராட்சி மற்றும் வீடமைப்பு அமைச்சரினால் வெளியிடப்பட்டுள்ள 1988 பெப்ரவரி 19 திகதிய 494 ஆம் இலக்க இலங்கை குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் குறிப்பிட்ட ஆண்டு ஜனவரி 31 திகதிக்கு முன்னர் அல்லது அத் தினத்தில் செலுத்தப்படுமெனின் 10 சதவீதக் கழிவு ஒன்று மற்றும் தவணைப் பணமாக செலுத்தப்படுமெனின் முதல் மாதத்தில் 5 சதவீதம் கழிவு ஒன்றினை பெற்றுக்கொள்வதற்கு உரிமையொன்றினை கோருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நிலுவை மீதிகள் காணப்படும் 130 ஆதனங்களுக்காக ரூபா 5,913,000 தொகை வழங்கப்பட்டிருந்தென தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டதுடன் உரிய முறையில் வரி செலுத்துவோர் மற்றும் செலுத்தாதோர் இரு சாராருக்கும் சமமான முறையில் கழிவு வழங்குவதன் மூலம் உரிய முறையில் வீதவரி செலுத்துவோருக்கு மறை ரீதியான தாக்கம் ஏற்படுதல் தவிர்க்க முடியாது என அவதானிக்கப்பட்டது. சபையின் தற்போது காணப்படும் தகவல் தொழிநுட்ப செயற்பாட்டு முறைமையை (AS400) யில் பெறுமதி மதிப்பீடு செய்தல் தொடர்பான விடயப் பரப்பு ஒன்று அடங்கியிருந்த போதிலும் அந்த பரப்பினை இற்றைவரைப்படுத்துவதற்கு நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.

(எ) பெறுமதி மதிப்பீடு தொடர்பாக தகவல் முறைமையொன்று ஏற்படுத்துவதற்காக வருடாந்தப் பாதீட்டின் பிரகாரம் 2013 ஆண்டின் போது ரூபா 10 மில்லியன் தொகையும், 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 7.2 தொகையும் 2015 ஆண்டின் போது ரூபா 15.3 மில்லியன் தொகையும் மற்றும் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 20 மில்லியன் என நிதியேற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும் 2016 ஆகஸ்ட் 03 திகதி வரை இது தொடர்பாக எதுவித செயலாற்றுகையும் நடைபெற்றிருக்கவில்லை.

### 2.4.3 விழா மண்டப வாடகை

தெரிவுப் பரிசோதனையின் படி மெகசின் வீதி விழா மண்டபத்தை ஒதுக்குவதற்கான விண்ணப்பத்தில் கட்டண வாய்ப்பாட்டின் பிரகாரம் ஒரு நாளைக்கான வாடகை ரூபா 5000 தொகை மற்றும் வைப்புத் தொகை ரூபா 5,000 தொகையும், அறை நாளுக்காக (5 மணித்தியாலங்களுக்கு) ரூபா 2,500 தொகை மற்றும் வைப்புத் தொகை ரூபா 5,000

தொகையும், மேலதிக மணித்தியாலத்திற்கு ரூபா 900 தொகை மற்றும் கட்டணத்திற்கான பெறுமதி கூட்டிய வரி 15 சதவீதம் அறவிடப்பட வேண்டுமெனினும் அதற்கு முரணாக 19 சந்தர்ப்பங்களில் கட்டணமாக ரூபா 6,410 தொகை மற்றும் வைப்புத் தொகைக்காக ரூபா 53,500 தொகை குறைவாக அறவிடப்பட்டிருந்தது.

**2.4.4 நகர வர்த்தக நிலையங்களின் வாடகை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 255 நகர வர்த்தக நிலையங்கள் வாடகை அடிப்படையில் வழங்கியிருந்ததுடன் அவற்றில் 232 நிறுவனங்களில் இருந்து 2015 திசெம்பர் 31 திகதி அளவில் மொத்த நிலுவை வருமானம் ரூபா 25,079,544 தொகையாகும். மேலும், மூன்று தவணைகளை விட மிகையான நிலுவைகள் காணப்படும் நிலுவை வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கை வாடகைக்கு கொடுத்துள்ள மொத்த வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கையில் 59 சதவீதமாகும்.

(ஆ) நகர வர்த்தக நிலையங்கள் வாடகைக்கு கொடுப்பதன் மூலம் வருடாந்தம் எதிர்ப்பார்த்த வருமானம் ரூபா 25,000,000 ஆக காணப்பட்டதுடன் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட மொத்த நிலுவை வருமானம் ரூபா 25,079,544 ஆகக் காணப்பட்டது. அந்த மொத்த நிலுவை வருமானம் மொத்த வருமானத்தில் 84 சதவீதம் வரை அதிகரித்துக் காணப்பட்டது.

(இ) கடைகள் மற்றும் விற்பனை நிலையங்களின் நிலுவை வாடகைத் தொகை 03 தவணைகள் முதல் 200 தவணைகள் வரை வீச்சில் ரூபா 23,807,139 தொகையும் 200 தவணைகளை மிகைத்தவை ரூபா 786,939 உம் காணப்பட்டது.

**2.5 மிகை விதிப்பு**

சபைக்கு என்னால் விதிக்கப்பட்ட 06 மிகை விதிப்பு சான்றிதழ்கள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 290,387 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 நகர நுண்ணங்கி ஆய்வு கூடத்தின் செயலாற்றுகை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையினால் நடத்தப்படும் நகர நுண்ணங்கி ஆய்வு கூடத்தின் விவகாரங்களுக்காக 2015 ஆண்டிற்கான பாதீட்டின் மூலம் ரூபா 17,050,167 இற்கான வருமானமொன்று மற்றும் ரூபா 84,626,632 இற்கான செலவு ஒன்று எதிர்ப்பார்க்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் இணக்கஞ் செய்யும் போது 2015 ஆண்டின் போது அறவிடப்பட்ட ஆய்வுக் கட்டண வருமானம் 79 சதவீதத்தினால் குறைந்துள்ளதுடன் அது எதிர்ப்பார்த்த வருமானத்தில் 28 சதவீதமாகக் காணப்பட்டது. செலவுகளும் அதிகரித்திருந்ததுடன் அவற்றில் மூலதனச் சொத்துக்களின் பராமரிப்புச் செலவு 83 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

(ஆ) நுண்ணங்கி ஆய்வு கூடத்தில் கடந்த நெருங்கிய 5 வருடங்களாக பணம் அறவிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் எண்ணிக்கை மற்றும் அறவீடு செய்யப்பட்ட வருமானம் தொடர்பான விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | நீர் மாதிரி களின் எண்ணிக்கை | உணவு மாதிரிகளின் எண்ணிக்கை | மருந்துப் பரிசோதனை எண்ணிக்கை | மொத்த பரிசோதனை களின் எண்ணிக்கை | அறவிடப்பட்ட வருமானம் ரூபா. |
|---|---|---|---|---|---|
| 2011 | 1303 | 1090 | 28602 | 30995 | 8,888,659 |
| 2012 | 1688 | 2785 | 51390 | 53863 | 16,900,507 |
| 2013 | 2136 | 1708 | 51381 | 55225 | 17,538,480 |
| 2014 | 1709 | 1448 | 39789 | 42946 | 22,707,810 |
| 2015 | 768 | 274 | 7352 | 8394 | 4,836,532 |

பணம் அறவீடு செய்து மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை 2011 ஆண்டு முதல் 2013 ஆண்டு வரை படிப்படியாக அதிகரித்துச் சென்று 2014 ஆண்டின் போது முன்னைய ஆண்டை விட 22 சதவீதத்திற்கான குறைவாதலொன்றினையும் 2015 ஆண்டின் போது 80 சதவீதத்திற்கான குறைவடைதல் ஒன்றினையும் அதற்கு சமமாக 2015 ஆண்டிற்கான வருமானம் முன்னைய ஆண்டை விட 79 சதவீதத்தில் குறைவடைதல் ஒன்றினையும் காட்டுகின்றது.

(இ) 2011 உணவு தரங்கள் 11 இன் பிரகாரம் உணவுகளை உபயோகித்தல் தொடர்பாக செயற்படும் அனைத்து நபர்களும் சேவையில் ஈடுபடுவதற்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட மருத்துவர் ஒருவரினால் தகுதியான சுகாதார நிலைமையில் காணப்படுவதாக சான்றுபடுத்தப்பட வேண்டும். மேலும், நகரத்தில் உணவுகளுடன் தொடர்புடைய வர்த்தகம் ஒன்றினை நடத்துவதற்காக வர்த்தக அனுமதிப்பத்திரம் ஒன்று வருடாந்தம் பெற்றுக் கொள்ள வேண்டுமெனினும் அதற்காக பிரதான சுகாதார மருத்துவ உத்தியோகத்தரின் விதப்புரை பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்கான துணைவிதி ஒன்று ஆக்கி நுண்ணங்கி ஆய்வு கூடத்தில் இருந்து குறிப்பிட்ட மருத்துவப் பரிசோதனை மேற்கொள்வதற்காக ஊக்குவிப்பு ஒன்றினை ஏற்படுத்தி வருமானம் ஒன்றினை ஈட்டுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) ஒரே தடவையில் கணிசமான அளவு உணவு மாதிரி எண்ணிக்கைகளை பரிசோதனை மேற்கொள்வதற்கு ஏற்ற சாத்தியக் கூறினை கொண்டிருந்த நவீன இயந்திர உபகரணங்கள் தொகையொன்று கொள்வனவு செய்தல் மற்றும் மூலதனச் சொத்துக்களை பராமரிப்பதற்காக 2011 முதல் 2015 வரை ரூபா 62,857,231 தொகை செலவிடப்பட்டிருந்த போதியளவு உணவு மாதிரிகள் பரிசோதனை செய்யப்படாமையால் அவ் உபகரணங்கள் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது.

(உ) ஆய்வு கூடத்தின் பரிசோதனை குறைவடைந்திருந்த காரணத்தினால் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த இரசாயன பொருட்கள் இருப்பில் மிகையாகக் காணப்பட்ட இரசாயனப் பொருட்கள் காலவதியாதல் மற்றும் காலவதியாவதற்கு அண்மித்தல் காணக்கூடியதாக இருந்தது.

(ஊ) தனிப்பட்ட உணவுகள் மற்றும் நீர் மாதிரிகளின் பகுப்பாய்வு அறிக்கை வழங்குதல் தொடர்பாக சபைக்கு அறவிடப்படும் பணத்தில் 35 சதவீதம் அதனோடு தொடர்புடைய கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு மற்றும் ஊழியர்களுக் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் கொடுப்பனவு செய்வதற்கு கௌரவ ஆளுனரினால் 2011 முதல் 2013 ஆண்டுகளுக்காக ரூபா 4,767,983 தொகை அங்கீகரித்திருந்த போதிலும் அவ் அங்கீகாரத்தை மிகைத்து 2011, 2012 மற்றும் 2013 பெப்ரவரி மாதம் வரை நகர நுண்ணங்கி ஆய்வுகூட உத்தியோகத்தர்களுக்கு மற்றும் ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு படி என ரூபா 13,588,617 தொகை செலுத்தியிருந்ததுடன் அங்கீகாரம் இன்றி செலுத்தியிருந்த தொகை ரூபா 8,820,634 ஆகும். அப் பரிசோதனைகளுக்காக செலவிடப்பட்ட நேர்ச் செலவுகளைக் கழிக்காமல் மொத்த வருமானத்தின் மீது ஊக்குவிப்புப் படி கணக்கிடப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது.

நுண்ணங்கி ஆய்வுகூட களஞ்சியத்தில் காணப்படும் இருப்பு தொடர்பாக நி.பி. 756(1) இன் பிரகாரம் வருடாந்த பண்டக் கணிப்பீடொன்று இது வரை எச் சந்தர்ப்பத்திலும் நடத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த ஆய்வு கூடத்திற்கு கடந்த நெருங்கிய 05 வருடங்களில் ரூபா 138 மில்லியனுக்கான இரசாயனப் பொருட்கள் வழங்கப்பட்டிருந்தது.

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

#### 3.2.1 உடல்சார் பொருத்த நிலையங்களுக்கு உபகரணங்கள் கொள்வனவு செய்தல்

கொச்சிக்கட சன சமூக நிலையத்தில் நடத்தப்படும் உடல்சார் பொருத்த நிலையத்தை மிக்க நவீன நிலையமாக ஆக்குவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 9,244,964 தொகையொன்று செலவிடப்பட்டு மெய்விருத்தி மற்றும் சரீர
பொருத்த உபகரணங்கள் கொள்வனவு செய்திருந்ததுடன் இங்க மெய்விருத்தி ஆலோசகரினால் வேண்டியிருந்தவாறு மெய்விருத்தி உபகரணங்களை விட மேலதிகமாக ரூபா 1,759,772 தொகைக்கான துணைக் கருவிகளும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கூடியவிலை சமர்ப்பித்திருந்த USA உற்பத்திப் பொருளான ரியல்லீடர் உற்பத்திப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டும் என தொழிநுட்ப மதிப்பாய்வு குழுவின் விதப்புரையின் படி 52 விடயங்கள் எம்பரர் டிஸ்டிபியூடர் இல் இருந்து கொள்வனவு செய்திருந்தது. எனினும் USA Real Leader வர்த்தக பெயர் சீன அரசாங்க உற்பத்திப் பொருள் ஒன்றென கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ii) நியமக் குறிபீடுகளின் படி Treadmill 05 குதிரைவேக இயலளவினைக் கொண்டதாக இருக்க வேண்டுமெனினும் 03 குதிரை வேக இயலளவினையுடைய ரூபா 900,000 தொகை பெறுமதியான 02 Treadmill கள் சனசமூக சபைக்கு கிடைத்து 02 மாதங்களில் அவற்றின் உட்பகுதி செயற்படாமையால் Acer இனத்தைச் சேர்ந்த Treadmill 02 மீண்டும் வழங்கப்பட்டிருந்தது.

(iii) ரூபா 4,070,368 தொகை பெறுமதியான 09 மெய்விருத்தி உபகரணங்கள் சனசமூக சபைக்கு வழங்கியிருந்த போதிலும் விளையாட்டுத்துறை மற்றும் பொழுதுபோக்குத் திணைக்களப் பணிப்பாளரினால் 2015 திசெம்பர் 04 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்த மெய்விருத்தி உபகரண வினியோக அறிக்கையில் அந்த மெய்விருத்தி உபகரணங்கள் அடங்கியிருக்கவில்லை.

(iv) கொச்சிக்கடை மெய்விருத்தி நிலையம், சபை அங்கீகாரம் மற்றும் உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்படாமல் விளையாட்டு கழகம் ஒன்றிற்கு ஒப்படைக்கப்பட்டு அவ் விளையாட்டுக் கழகத்திற்கு பணம் அறவீடு செய்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

(v) உடற்பயிற்சி உபகரணங்களின் வெள்ளை இரும்புப் பகுதிகள் துருப்பிடித்திருந்ததுடன் கொள்வனவு உடன்படிக்கையின் பிரகாரம் தேவையான சந்தர்ப்பங்களில் சேவைகள் (Service) மற்றும் பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என இணங்கியிருந்த போதிலும் குறிப்பிட்ட நிறுவனங்களின் மூலம் உடற்பயிற்சி உபகரணங்களில் படிந்திருந்த துருக்களை அகற்றுதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 3.2.2 கொழும்பு 05 பார்க் லேன் 4(2 ½) இலக்க உத்தியோகபூர்வ வாசஸ்தலம்

கொழும்பு மாநகர சபையின் முன்னைய சுகாதார வைத்திய உத்தியோகத்தர் ஓய்வு பெற்ற பின்னர் அவரது மனைவி ஆகிய ஆய்வுகூட சேவையில் கடமையாற்றும் பெண்

மருத்துவருக்கு உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை வழங்கியிருந்ததுடன் தாபனக் கோவையின் 19 ஆம் அத்தியாயம் 5.4 ஆம் பிரிவின் பிரகாரம் பட்டியலிடப்பட்ட வீடு ஒன்றினை பெறுவதற்கு உரிமையில்லாத இந்த பெண் உத்தியோகத்தரின் சம்பளத்தில் இருந்து 12½ சதவீத வாடகை ஒன்று அறவிடப்பட வேண்டுமெனினும் 2014 ஜூன் முதல் சம்பளத்தில் இருந்து 2½ சதவீத வாடகையொன்று அறவிடப்பட்டிருந்தது. விதிக்கப்பட்டுள்ளவாறு அறவிடப்பட வேண்டிய மொத்த தொகை ரூபா 148,667 எனினும், அறவிடப்பட்டிருந்த தொகை ரூபா 29,733 தொகையாகக் காணப்பட்டமையால் மேலும் அறவிடப்பட வேண்டிய ரூபா 118,934 ஆகும். 4 ஆம் இலக்க உத்தியோகபூர்வ வாசஸ்தலம் இந்த உத்தியோகபூர்வ வாசஸ்தலத்துடன் இணைந்து காணப்பட்டும் காரணத்தினால் பட்டியலிடப்பட்ட வீடொன்றினை பெற்றுக்கொள்வதற்கு உரித்துடைய உத்தியோகத்தர் ஒருவருக்கு உத்தியோகபூர்வ வாசஸ்தல வசதிகள் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தினை இழந்திருந்ததுடன் அந்த 4 ஆம் இலக்க உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய வாடகை வருமானத்தினை இழந்துள்ளது.

**3.2.3 வாகனங்கள் கொள்வனவு செய்தல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) 2015 பெப்ரவரி 19 ஆம் திகதிய 01/2015 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 6.3 பந்தியின் படி 2015 ஆண்டின் போது புதிய வாகன இறக்குமதி அல்லது கொள்வனவு செய்தல் இடை நிறுத்தப்பட்டிருந்ததுடன் சபையினால் ஆண்டின் போது ரூபா 35,750,000 தொகைக்கான வாகனங்கள் கொள்வனவு செய்திருந்ததுடன் ரூபா 13,000,000 தொகைக்காக 2 கப் வண்டிகள் கொள்வனவு செய்வதற்காக மாத்திரம் தேசிய பாதீட்டு திணைக்களத்தில் இருந்து அங்கீகாரம் கிடைத்திருந்தது.

(ii) மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் பிரகாரம் நிதி தொடர்பாக நிரந்தர குழுவினால் ஏற்கனவே கவனம் செலுத்தி பொதுக்கூட்டத்திற்கு அறிவிக்கும் வரை, மா நகரம் ஒன்றினால் நிதி தொடர்புடைய விடயம் ஒன்று தொடர்பாக இறுதி நடவடிக்கை எடுக்கக் கூடாது என இருந்த போதிலும், அதற்கு முரணாக இரண்டு சந்தர்ப்பங்களில் சபையின் அணவல் அங்கீகாரத்தின் கீழ் ரூபா 22,750,000 தொகை பெறுமதியான வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

**3.2.4 சபை அங்கத்தவர் படி மீளளிப்பு செய்தல்**

மீளாய்வாண்டின் போது நகர பிதா, பிரதி நகர பிதா மற்றும் 51 அங்கவர்களுக்கு அங்கத்தவர் படி ரூபா 12,860,000 தொகை செலுத்தியிருந்த போதிலும் ஆண்டிற்கான உள்ளூராட்சித் திணைக்களத்தினால் மீளளிப்புச் செய்திருந்த தொகை ரூபா 3,333,000 தொகை மாத்திரமே. 2015 ஆண்டின் போது அங்கத்தவர் படி அதிகரிப்பின் மீது கவனம் செலுத்தாமல் பழைய பெறுமதிக்கே உள்ளூராட்சி திணைக்களத்தினால் பணம் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. அத்துடன் சரியான பெறுமதிக்கு வருமானத்தை மீளளிப்புச் செய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் பிரகாரம் 2015 ஆண்டின் போது மீளளிப்பு செய்யப்படாத அங்கத்தவர் படி ரூபா 9,527,000 தொகையாகக் காணப்பட்டது. 2014 ஆண்டின் போது அவை ரூபா 2,650,000 தொகை ஆகும். மேலும், பணத்தை மீளளிப்பு செய்யும் போது பணத்தைப் பெற்றுக்கொண்டதற்காக மந்திரிமார்களிடம் கையொப்பத்தை பெறுவதற்கும் மற்றும் நிதி மீளளிப்பு விண்ணப்பம் உள்ளூராட்சி திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கும் போதும் கணிசமான அளவு தாமதம் ஒன்று காணப்பட்டது.

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

#### 3.3.1 நகர அச்சகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஹைட் பார்க்கில் நிர்மாணிக்கப்பட்டிருந்த நகர அச்சகக் கட்டிடம் மற்றும் அதனுள் இயக்கும் இயந்திரங்களின் செயற்பாடுகளுக்காக 400 எம்பியர் மின் இயலளவு ஒன்று தேவை என கட்டிடத்தின் வரைந்த நிர்மாண வேலை கம்பனி சுட்டிக்காட்டியிருந்த போதிலும் அதனை கவனத்தில் எடுக்காமல் சபையினால் இந்த கட்டிடத்திற்காக 60 எம்பியர்கள் கொண்ட மின் தொடர்பு ஒன்றினை பெற்றிருந்தது. அச்சகத்தில் காணப்படும் அனைத்து அச்சு இயந்திரங்களையும் எம்பியர் 60 இயலளவினால் செயற்படுத்த முடியாமையினால் சபையின் நாளாந்த அலுவல்களுக்குத் தேவையான ஆவணங்களின் அச்சு விடயங்கள் 01 மாதம் முதல் 06 மாதங்கள் வரையும், 04 பல்வேறு திணைக்களங்களின் மற்றும் 02 பிரிவுகளுக்கான அச்சு விடயங்களிலும் தாமதங்களும் காணப்பட்டது.

(ii) 2014 ஆண்டின் போது ரூபா 39,447,287 தொகை செலவிடப்பட்டு நகர அச்சகத்திற்காக SM74-2 வகையான இரட்டை வர்ண ஒப்செட் அச்சு இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இவ் இயந்திரம் கொள்வனவு செய்யும் போது கொழும்பு மா நகர சபை அச்சு வேலைகளுக்கு மேலதிகமாக வெளி நிறுவனங்களின் அச்சுவேலைகளை செய்து கொடுத்து வருமானம் ஒன்று உழைக்கும் குறிக்கோள் ஒன்றும் சபைக்கு இருந்ததுடன் 2016 மே 30 வரை 11 வெளி நிறுவனங்களினால் அச்சு விடயங்களுக்காக கூறுவிலை கோரப்பட்டதுடன் அதற்காக பதில் அளிக்கப்படாமையால் சபைக்கு உழைக்கக் கூடியதாகவிருந்த வருமானம் ஒன்றினை இழந்துள்ளது.

#### 3.3.2 கொழும்பு மா நகர சபையில் 150 ஆவது ஆண்டு விழாவிற்காக புத்தகங்கள் அச்சிடல்

இந்த ஆண்டு நிறைவு விழாவிற்காக Coffee Table Book 500 பிரதிகள் அச்சிடுவதற்காக ரூபா 4,520,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்த புத்தகங்களை ரூபா 15,000 மற்றும் ரூபா 20,000 இடைப்பட்ட விலைகளுக்கு விற்பனை செய்ய முடியுமென பணம் தொடர்பான நிரந்தரக் குழுவின் விதப்புரை கிடைத்திருந்த போதிலும் 2016 மே 04 திகதி வரை ரூபா 10,000 தொகை வீதம் 05 புத்தகங்கள் மாத்திரம் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 1,826,080 கிரயத்தையுடைய 202 புத்தகங்கள் பொது நூலகத் திணைக்களத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

#### 3.3.3 வாகனங்கள் வாடகைக்கு எடுத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக மீதொடமுள்ள குப்பைகள் தளத்திற்கு 03 புல்டோசர்கள் மற்றும் 05 எக்ஸவேடர்கள் சேவையில் ஈடுபடுத்தியதற்கான தனியார் நிறுவனமொன்றிற்கு 2015 ஆண்டின் போது ரூபா 168,722,961 தொகை செலுத்தப்பட்டிருந்தது. வருடாந்தம் சபை நிதியத்தில் இருந்து கணிசமான அளவு செலவு ஒன்று இதற்காக செலவிடப்படுவதினால் சபையினால் வாகனங்கள் கொள்வனவு செய்து சேவையில் ஈடுபடுத்தியிருந்தால் செலவினை குறைப்பதற்கு மற்றும் சொத்துக்களை சபைக்கு உரித்தாக்குவதற்கு முடியுமாக இருந்தது.

(ii) 2015 ஏப்ரல் 30 திகதி 2117 இலக்க சபைத் தீர்மானத்தின் பிரகாரம் சபைக்கு சொந்தமான சபையின் வேலைத் தளத்தில் காணப்படும் பெக்கோ லோடர் இயந்திரங்கள் பழுதுபார்த்து குப்பைத் தளத்தின் வேலைகளுக்காக ஈடுபடுத்துவதற்கும் அதன் பின்னர் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளும்

பெக்கோ லோடர் இயந்திரங்கள் பெற்றுக் கொள்ளாமல் இருப்பதற்கும் விதந்துரைகப்பட்டிருந்த போதிலும் ஒட்டுமொத்தமாக ஆண்டு பூராகவும் 2 லோடர் வீதம் 4 மாதங்களும், 3 அல்லது 4 வீதம் 8 மாதங்களும் வாடகை அடிப்படையில் பெற்று ரூபா 81,096,604 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

(iii) ஒப்பந்த காலம் முடிவடைந்திருந்த போதிலும் முறையான கேள்வி நடைமுறை ஒன்று இன்றி 2015 ஜுன் 30 திகதிய பொதுக் கூட்ட தீர்மான இலக்கம் 2218 இன் பிரகாரம் ஆரம்ப ஒப்பந்தக்காரருக்கே மேற்கூறிய வேலை சாட்டப்பட்டிருந்தது.

**3.3.4 லொறி வண்டியை பழுதுபார்த்தல்**

சபைக்குக் சொந்தமான லொறி வண்டியொன்று பழுதுபார்ப்பதற்காக ரூபா 925,500 இற்கான செலவு மதிப்பீடு ஒன்றின் கீழ் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் எதிர்ப்பார்த்த திருத்த வேலைகள் என என்ஜினின் முழு பழுதுார்த்தல் வேலை, வேகத்தடுப்பு சாதன பழுதுபார்த்தல், மின் முறைமை பழுதுபார்த்தல், பொருத்து வேலைகள், வர்ணம் தீட்டு வேலை மற்றும் PTO இந்திரம் Hydraulic System பழுதுபார்த்தல் வேலைகள் குறிப்பிடப்பட்டிருந்தது. பழுதுபார்த்தல் வேலையின் பின்னர் லொறி வண்டி திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ பிரிவுக்கு வழங்கப்பட்டிருந்தது. 2016 மார்ச் 29 திகதி பௌதீகப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) வாகனத்தின் பொருத்து வேலைகள் மற்றும் வர்ணம் தீட்டுவேலைகளுக்காக ரூபா 290,000 தொகையொன்றிற்கான பில்பத்திரங்கள் வழங்கியிருந்த போதிலும் லொறி வண்டியினை பௌதீக பரிசோதனை செய்த போது குறிப்பிட்ட வேலைகள் உரிய முறையில் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) லொறி வண்டியை வயரின் பண்ணுவதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூபா 45,000 ஆகக் காணப்பட்டதுடன் பௌதீகப் பரிசோதனையின் போது லொறி வண்டியின் டேஷ் போடில் உட்பகுதியில் ஒழுங்கற்ற முறையில் வயர்கள் பொருத்தப்பட்டிருருந்தன.

**3.3.5 விட்ஸ் வைக் விளையாட்டுத் திடலில் தேக்கு மரம் வெட்டி அகற்றுதல்**

2014 மே முதல் ஜுன் வரையான காலப் பகுதியில் வயிட் வைக் விளையாட்டுத் திடலில் வெட்டி அகற்றப்பட்டிருந்த ரூபா 1,246,346 பெறுமதியான 50 தேக்கு மரக் குற்றிகள் விளைவற்ற கருமங்களுக்கு பயன்படுத்தப்படாமல் 18 மாத காலம் பாதுகாப்பற்ற நிலையில் சபைக்குச் சொந்தமான இடமொன்றில் குவிக்கப்பட்டு காணப்பட்டதென 2014 நவம்பர் 14 திகதி மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

**3.3.6 வீதவரி பெறுமதி மதிப்பீடு – விஷேட வகுப்பு வர்த்தகங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) வீதவரி இலக்கம் 578 ஆதனப் பெறுமதி மதிப்பீட்டு தொடர்பாக ஐந்து வருடங்களுக்கு ஒரு முறையான 3 திருத்தங்கள் தொடர்பாக பரிசோதனை மேற்கொண்ட போது பின்வரும் எண்ணியலான பெறுமதிகள் அவதானிக்கப்பட்டன.

| ஆண்டு | பெறுமதி மதிப்பீடு செய்த முறை | வருடாந்தப் பெறுமதி | காலாண்டிற்கான வீதவரி |
|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. |
| 2004 | ஒப்பந்த முறை | 38,500,000 | 3,368,750 |
| 2010 | முறைமை சமர்ப்பிக்கப்படவில்லை. | 40,600,000 | 3,552,500 |
| 2015 | முறைமை சமர்ப்பிக்கப்படவில்லை. | 44,660,000 | 3,907,750 |

- மேற் கூறிய பெறுமதிகளின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த ஐந்து வருடத்திற்கு ஒரு தடவை வருடாந்த வீதவரி திருத்தத்தின் போது அடிப்படையாகக் கொண்ட செயற்பாட்டு முறை பற்றிய தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்காததுடன் 2015 ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த தகவல்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலைமையில் காணப்படவில்லை. 2015 மேற்கொள்ளப்பட்ட ஐந்து வருடத்திற்கு ஒரு முறையில் வருடாந்த திருத்தத்தின் போது வீதவரி பெறுமதி மதிப்பீடு ரூபா 4,060,000 இனால் அதிகரித்திருந்ததுடன் அதற்கு சமமான காலாண்டிற்கான வீதவரி ரூபா 355,250 இனால் அதிகரித்து செல்லலை உறுதிப்படுத்துவதற்காக பயன்படுத்திய பெறுமதி மதிப்பீட்டு முறை பற்றிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

(ii) வீதவரி இலக்கம் 578 ஆதனம் தொடர்பாக 2004 ஐந்து வருடங்களுக்கு ஒரு முறையாக திருத்தம் தொடர்பாக தகவல்கள், கோவையில் உட்படுத்தியிருந்த போதிலும் இத் தகவல்கள் பரிசோதனை மேற்கொண்ட போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

- இந்த ஆதனத்தின் வருடாந்தப் பெறுமதியின் பெறுமதி மதிப்பீடு செய்வதற்காக இலாப முறைமை மற்றும் ஒப்பந்த முறைமையினை அடிப்படையாகக் கொண்டு பெறுமதி மதிப்பீட்டாளர் ஒருவரினால் வருடாந்தப் பெறுமதி பெறுமதி மதிப்பீடு செய்திருந்ததுடன் அங்கு உள்ளவாறான வருடாந்தப் பெறுமதி முறையே ரூபா 88,000,000 மற்றும் ரூபா 73,000,000 தொகைகள் என பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இந்த பெறுமதி மதிப்பீடு தொடர்பாக திருப்தியடையாமையால் வேறு ஒரு பெறுமதி மதிப்பீட்டாளர் ஒருவரின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பெறுமதி மதிப்பீடு செய்த போது உள்ளவாறான வருடாந்த பெறுமதியின் ரூபா 95,616,750 தொகை என பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இந்த உள்ளவாறான வருடாந்த பெறுமதி வாடகை பெறுமதி மதிப்பீட்டுடன் இணக்கஞ் செய்து அவற்றில் 44.7 சதவீதம் அதாவது ரூபா 42,750,000 தொகை என வருடாந்த பெறுமதி கணிக்கப்பட்டிருந்தது. நகர பெறுமதி மதிப்பீட்டாளர் ரூபா 42,500,000 இற்கான பெறுமதி மதிப்பீட்டினை அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் எதிர்ப்புகளின் காரணமாக ரூபா 38,500,000 வரை பெறுமதி மதிப்பீடு குறைக்கப்பட்டிருந்தது.

- மேற்கூறிய பெறுமதி மதிப்பீட்டாளர்களினால் ஒப்பந்த அடிப்படையில் பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளப்படும் போது அடிப்படையாக எடுத்த தகவல்களிடையே பாரிய இடைவெளி ஒன்று அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரங்கள் | பெறுமதி மதிப்பீடு – 1 | பெறுமதி மதிப்பீடு – 2 | வித்தியாசம் | வித்தியாசத்தின் சதவீதம் % |
|---|---|---|---|---|
| 1 பர்சஸ் காணியின் பெறுமதி | 120,000 | 300,000 | 180,000 | 150 |
| கட்டிடத்தின் சதுர அடி எண்ணிக்கை | 300,000 | 339,045 | 39,045 | 13 |

- மேற்கூறிய காரணங்களின் படி தொழிற்துறை பெறுமதி மதிப்பீட்டாளர்களின் பெறுமதி மதிப்பீடு செய்தல் தொடர்பாக சரியான தகவல்கள் வீதவரி பெறுமதி மதிப்பீடு

செய்வதற்காக பயன்படுத்தப்பட்டதென உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் வீதவரி மதிப்பீடுகளில் பிழையற்ற தன்மை பற்றிய கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதிருந்தது.

(iii) ஆதன பெறுமதி மதிப்பீட்டுக் கோவைகள் பேணப்படும் போது ஐந்து வருடத்திற்கு ஒரு முறை திருத்தங்களின் போது, பயன்படுத்திய பெறுமதி மதிப்பீடுகள் தொடர்புடைய தகவல்கள் கோவைகளில் இற்றைவரைப்படுத்தல் தொடர்பாக போதியளவு கவனமொன்று செலுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(iv) திருத்தங்கள் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அவை 6 வருடங்கள் முதல் 40 வருடங்கள் வரை தாமதித்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(v) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் குறை அபிவிருத்தி வருமான வட்டாரங்கள் என நாரஹேன்பிட, கிருளை, கிருளபன மற்றும் கிழக்கு பாமங்கட ஆகிய 04 வட்டாரங்கள் தொடர்பாக வீதவரி பெறுமதி மதிப்பீட்டு ஆதனங்கள் 17,231 இனங்காணப்பட்டிருந்தது. 50 வருடங்களுக்கு முன்னர் இருந்து குறை அபிவிருத்திப் பகுதி என இனங்காணப்பட்டிருந்த அவ் வட்டாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் ஏதும் இது வரை எடுக்கப்படாத காரணத்தினால் வீதவரி அறவிடுதல் 15 சதவீத நிலையில் காணப்பட்டதுடன் அதனை முன்னேற்றுவதற்கு சபை செயற்படாமையால் ஆண்டுதோரும் சபை கணிசமான அளவு வருமானம் ஒன்றினை இழந்துள்ளது.

### 3.3.7 அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள்

சபையின் அதிகாரப் பிரதேசத்தைச் சேர்ந்த 47 வலயங்களில் 1982 எண்ணிக்கையான அங்கீகாரமற்ற நிர்மாணவேலைகளை 2014 ஆண்டு வரை இனங்கண்டிருந்த போதிலும் அந்த அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் தொடர்பாக எடுக்கும் நடவடிக்கைகள் பற்றி அறிவித்திருக்கவில்லை.

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மை கொடுக்கல் வாங்கல்கள்

### (அ) ஆர்.எல்.த மெல் மாவத்தையில் அமைந்துள்ள வீதவரி இலக்கம் 105 கொண்ட காணி

(i) பௌத்த சமய விடயமொன்றிற்காக 99 வருட வாடகை உடன்படிக்கை ஒன்றின் மீது 1983 செப்தெம்பர் 04 திகதி ஒரு வருடத்திற்கு ரூபா 1,200 வீதம் வாடகைக்கு கொடுத்திருந்த 2 ரூட் 19 பர்சஸ் உடைய இந்த காணி வாடகையாளர்களினால் சபையின் அங்கீகாரமின்றி 1994 ஜனவரி 11 திகதி துணை வாடகைக்கு கொடுத்திருந்ததுடன் அதன் பின்னர் 21 வருடங்களை அண்மித்த காலம் துணை வாடகையாளர் ஆதனத்தை அனுபவித்திருந்தார். 2016 மே 30 வரை குறிப்பிட்ட துணை வாடகையாளர் அனுபவிப்பதாக அவதானிக்கப்பட்டதுடன் அது தொடர்பாக நடவடிக்கை ஏதும் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக அங்கீகாரம் வழங்கியதன் மூலம் ஏற்பட்டுள்ள முரணான முற்பண செயற்பாடுகள் தொடர்பாக போதியளவு பரிசோதனைகள் இது வரை நடைபெற்றிருக்கவில்லை.

(ii) சட்ட ரீதியாக சாட்டுதல் மேற்கொள்ளாமல் துணை வாடகையாளரினால் பயன்படுத்தப்படும் மேற்கூறிய ஆதனம் தொடர்பாக விதிக்கப்பட்ட வீதவரியினை செலுத்துவதை புறக்கணித்திருந்ததுடன் 2012 முதல் 2015 வரையான 04 வருடங்கள் தொடர்பாக ரூபா 1,170,637 இற்கான வீதவரி அறவிடப்பட வேண்டியிருந்தது.

**(ஆ) போலியான தகவல்களின் மீது ஆதனங்களின் உரிமையை மாற்றுதல்**

வீதவரி வட்டார இலக்கம் 32, குப்பியாவத்த, மேற்குப் பகுதியில், மருதானை வீதி 680 ஆம் இல்லத்தில் அமைந்துள்ள 34.35 பர்சஸ் ஆதனத்தின் உரிமை 1958 ஆண்டு முதல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக இருந்ததுடன் தனிப்பட்ட உரிமையாளர் ஒருவரின் பெயரில் வீதவரி பதிவேட்டில் போலியான முறையில் உட்படுத்தியதன் மூலம் அந்த தனிப்பட்ட உரிமையாளருக்கு போலியான உரிமையொன்றினை பெற்றுக்கொடுப்பதற்கு திட்டமிட்டு செயற்பட்டுள்ளதாக கணக்காய்வினால் அறிவித்த பின்னர் முந்திய உரிமையாளரின் பெயர் வீதவரி பதிவேட்டில் உட்படுத்தப்பட்டிருந்தது. உரிமை மாற்றம் செய்தல் தொடர்பாக அனைத்து ஆவணங்களும் காணாமல் போகச் செய்திருந்ததுடன், விடயத்துடன் தொடர்புடைய சாராரை இனங்கண்டு தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

**3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

**ஹென்றி பேதிரிஸ் விளையாட்டு மைதானத்தை வாடகைக்கு கொடுத்தல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 02 ரூட் 12.15 பர்சஸ் கூடைப்பந்து விளையாட்டு மைதானம் இளைஞர்களுக்கு நாளை என்ற அமைப்புக்கு 2012 ஜனவரி 16 திகதி முதல் 2032 ஆண்டு ஜனவரி 15 திகதி வரை 20 வருட காலப் பகுதிக்காக வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. கொழும்பு நகரில் வாழ்வோரின் விளையாட்டு விவகாரங்களை மேம்படுத்துதல் அல்லது சபையின் வருமானத்தை அதிகரித்தல் மீது கவனம் செலுத்தாமல் போட்டி அடிப்படையில் கேள்விகள் கோரப்படாமல் மேற்கூறிய அமைப்பின் கோரிக்கையினை மாத்திரம் கவனத்தில் எடுத்து விளையாட்டு மைதானத்தினை வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ii) இந்த ஆதனத்தை வாடகைக்கு கொடுப்பதற்கு நகர பெறுமதி மதிப்பீட்டாளரின் அறிக்கையின் பிரகாரம் மாதாந்த வாடகை ரூபா 300,000 தொகை என தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2011 செப்தெம்பர் 27 ஆம் திகதிய இலக்கம் 2227 கொண்ட சபை தீர்மானத்தின் பிரகாரம் வாடகையை ரூபா 115,000 தொகை வரை குறைத்திருந்ததுடன் இவ்வாறு குறைத்ததன் காரணமாக 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபை நிதி இழந்துள்ள வருமானம் ரூபா 8,510,000 தொகையாகும்.

(iii) உடன்படிக்கையின் (III) ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 20 மில்லியன் தொகையொன்று விளையாட்டு மைதானத்தை நவீன மயப்படுத்துவதற்காக வாடகையாளரினால் முதலீடு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டுமென்று குறித்திருந்த போதிலும் அந்த முதலீட்டினை மேற்கொள்ள வேண்டிய மற்றும் அதற்கான காலப்பகுதி குறிப்பிடப்படாமையால் அம் முதலீடு விளைவுடையதாகியதா என பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. மேலும், வாடகை காலப்பகுதியில் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு நிர்மாணிக்கப்படும் கட்டிடத்தின் வரைபு மற்றும் குறிப்பிட்ட கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படும் விதம் தொடர்பாக போதியளவு தகவல்கள் உடன்படிக்கை மேற்கொள்வதற்கு முன்னர் பெற்றுக்கொள்ள வேண்டுமெனினும் அவ்வாறு போதியளவு தகவல்கள் ஏதும் பெற்றிருக்கவில்லை.

**3.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நகர பொறியியலாளர் திணைக்களத்தின் நீர் வழங்கள் வடிகாலமைப்புப் பிரிவில் கடமையாற்றும் அமைய ஊழியர்களுக்காக 1997 திசெம்பர் முதல் 2014 ஜனவரி

வரை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை தாமதமாகியன் காரணமாக ரூபா 182,064 இற்கான மிகை விதிப்பு ஒன்றும் மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 2000 ஜுன் முதல் 2014 பெப்ரவரி வரை செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை தாமதமாகிய காரணமாக ரூபா 963,274 இற்கான மிகைவிதிப்பு ஒன்றினை செலுத்த வேண்டியிருந்ததுடன் முகாமைத்துவத்தின் திறமையின்மை காரணமாக செலுத்துவதற்கு நேரிட்டிருந்த ரூபா 1,145,338 இற்கான மிகை விதிப்பு சபைக்கு ஏற்பட்டுள்ள நட்டம் ஒன்றாகும்.

(ஆ) 2015 ஆண்டின் போது செலுத்தியிருந்த தேர்தல் கடமைப் படி ரூபா 116,974 தொகை உரிய தினத்திற்கு முன்னர் தேர்தல் திணைக்களத்தில் இருந்து மீளளிப்பு செய்து கொள்ளாமையால் அந்த தொகை சபைக்கு ஏற்பட்டுள்ள நட்டமொன்றாகும்.

### 3.7 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

**குப்பையில் அடங்கிக் காணப்படும் பிளாஸ்டிக் மற்றும் பொலிதீன் மீள்சுழற்சி செயற்திட்டம்**

2014 ஆண்டின் போது செயற்திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு அவ் ஆண்டிலேயே நடைமுறைப்படுத்துவதற்காக நிறுவனம் ஒன்று தெரிவு செய்திருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 திகதி வரை உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இச் செயற்திட்டத்திற்காக 2006 ஏப்ரல் மாதத்தில் சுமார் ஒரு ஏக்கர் காணி தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும் இந்த காணி மக்கள் பிரதி நிதிகளினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வீடமைப்புத் திட்டமொன்றிற்காக பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டிருந்தது. கொழும்பு நகர திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் மற்றும் மீதொடமுள்ள குப்பைகளை குவிக்கும் நிலையத்தின் சுற்றாடல் சிக்கல்கள் ஏற்பட்டிருந்தமையால் தொடர்ச்சியாக மக்கள் கிளர்ச்சி ஏற்படுகின்றமையால் இந்த பிரச்சினைக்கு தீர்ப்பு ஒன்று எடுப்பதில் தாமதம் செய்தல் நியாயமான நிலைமை ஒன்றாக காணப்படவில்லை.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம்/ செலவு இடையே கணக்காய்வின் போது முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு யுக்தி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளில் 50 சதவீதத்தை விட கூடுதலாக சேமிக்கப்பட்டிருந்த 786 செலவு விடயங்கள் அவதானிக்கப்பட்டதுடன் அவற்றில் 22 திணைக்களங்களில் 397 செலவு விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,426,184,980 தொகைக்கான நிதியேற்பாடுகள் முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தன.

(இ) 20 திணைக்களங்களில் 175 செலவு விடயங்களுக்காக வருடாந்த பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக 50 சதவீதத்தை விட கூடுதலான தொகையொன்று நிதியேற்பாடுகள் வேறு செலவு விடயங்களில் இருந்து மாற்றப்பட்டிருந்தன. இவ்வாறு வேறு செலவு விடயங்கள் ஊடாக மாற்றப்பட்டிருந்த மேலதிக நிதியேற்பாடுகள் 50 சதவீதம் முதல் 17900 வரையான வீச்சில் இருந்தது.

## 4.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

### விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நுண்ணங்கி ஆய்வு கூடத்திற்கான 2015 செப்தெம்பர் 14 திகதி கொள்வனவு செய்திருந்த ரூபா 285,000 பெறுமதியான 3 ECG உபகரணங்கள் 2016 மார்ச் 24 திகதி வரையும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) Sky Lift வண்டி 2007 ஏப்ரல் மாதம் முதல் பயன்படுத்த முடியாத நிலைமை ஒன்று ஏற்பட்டுள்ளமையால் தீ அணைப்பு பிரிவின் பயிற்சித் தளத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(iii) ரூபா 2,172,744 தொகையொன்று செலவிடப்பட்டு 2012 ஆண்டின் போது பழுதுபார்க்கப்பட்டிருந்த லான்ட்ரோவர் வண்டி இது வரை எதுவித தேவைக்கும் பயன்படுத்தப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(iv) திடீர் விபத்து ஒன்று காரணமாக பழுதுபார்ப்பதற்காக அனுப்பப்பட்டிருந்த டிரக்டர் வண்டி திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவப் பிரிவின், கராஜில் நிறுத்தப்பட்டு காணப்பட்டது. அத்துடன் 2011 ஜூன் 04 திகதி ரூபா 99,800 இற்கான பழுதுபார்த்தல் மதிப்பீடு ஒன்று வழங்கப்பட்டிருந்தது. 2016 ஏப்ரல் 05 திகதி வரை இந்த டிரக்டர் வண்டியை பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.

(v) ஓட்ட நிலையில் இருந்து அகற்றப்பட்டிருந்த சபைக்குச் சொந்தமான டோஸர் வண்டியை பழுதுபார்ப்பதற்காக 2015 திசெம்பர் 31 திகதி வரை எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்காததுடன் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்ட 30 வாகனங்கள் கைத்தொழிற்சாலை வளாகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

## 4.3 தீர்க்கப்படாத மற்றும் பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

2014 ஆண்டின் போது ரூபா 4,991,542 இற்கான கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய கணக்காய்வு ஐய வினா ஒன்றிற்கு 2016 செப்தெம்பர் 30 திகதி வரை பதில் அனுப்பியிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்